**Q1 முதல் Q25 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.**

**'அ' பிரிவு**

**A1 வேற்றுமை**

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப் பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q1 வேலன் _______________ கல்லையும் மண்ணையும் வைத்ததால் பெட்டி கனமாக இருந்தது.

(1) பெட்டியின்
(2) பெட்டியில்
(3) பெட்டிக்கு
(4) பெட்டியால்

Q2 “மன்னரையே தூற்றத் _______________ என்ன தண்டனை வழங்கலாம்?” என்று அமைச்சர் கேட்டார்.

(1) துணிந்தவனை
(2) துணிந்தவனால்
(3) துணிந்தவனுக்கு
(4) துணிந்தவனுடைய

Q3 _______________ எல்லா வேலைகளையும் எளிதில் செய்ய முடியும்.

(1) அவனை
(2) அவனால்
(3) அவனிடம்
(4) அவனுடன்

Q4 மன்னன் புலவரின் புலமையைப் பாராட்டி அவர் கேட்ட ஐம்பது _______________ மேலும் பத்துப் பொற்காசுகளைச் சேர்த்துக் கொடுத்தார்.

(1) பொற்காசுகளை
(2) பொற்காசுகளில்
(3) பொற்காசுகளுக்கு
(4) பொற்காசுகளோடு

Q5 சற்று நேரத்தில் கையில் _______________ ஏந்திய வேடன் ஒருவன் காட்டிலிருந்து வந்தான்.

(1) வில்லை
(2) வில்லில்
(3) வில்லால்
(4) வில்லோடு



More papers at www.testpapersfree.com

**A2 செய்யுள் / பழமொழி**

Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் /பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(10 மதிப்பெண்கள்)

Q6 இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
_____________ செய்துவிடல்.

1. கண்ணியம்
2. புண்ணியம்
3. அபாயம்
4. நன்னயம்

Q7 தேடாது அழிக்கின் _____________ முடியும்.

1. பகையாய்
2. பாடாய்
3. தடையாய்
4. கேடாய்

Q8 உடையவன் _____________ வேலை ஒரு முழம் கட்டை.

1. பாராத
2. தேடாத
3. செய்யாத
4. முடிக்காத

Q9 சுடினும் செம்பொன் தன்னொளி _____________.

1. படாது
2. விடாது
3. கெடாது
4. வீசாது

Q10 பகுத்துண்டு பல்லுயிர் _____________ நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

1. உதவுதல்
2. ஓம்புதல்
3. காத்தல்
4. வழங்குதல்



More papers at www.testpapersfree.com

**A3 அடைமொழி / எச்சம்**

Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி/ எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப்பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q11. கட்டடங்கள் பல ஆண்டுகள் நிலைத்து நிற்பதற்கு __________ அடித்தளமே காரணமாகும்.

(1) உறுதியாய்
(2) உறுதி
(3) உறுதியாக
(4) உறுதியான

Q12. இந்த ______________ உலகத்தில் கஷ்டப்படுவோருக்கு உதவ முன்வந்தவர்களை அதிபர் பாராட்டினார்.

(1) நீள
(2) அகல
(3) பரந்த
(4) உயர

Q13. மேடையில் பேச்சாளர் ____________ உரை அனைவரையும் கவர்கிறது.

(1) சொல்லுகின்ற
(2) விளக்குகின்ற
(3) பார்க்கின்ற
(4) ஆற்றுகின்ற

Q14. முகிலன் ____________ மரத்தில் ஏறிப் பழங்களைப் பறித்தார்.

(1) உயர
(2) உயரமான
(3) உயரமாய்
(4) உயரமாக

Q15. என் பாட்டி இப்போது __________ வடை சுவையாக இருக்கிறது.

(1) சுடு
(2) சுட்ட
(3) சுடும்
(4) சுட்டு



More papers at www.testpapersfree.com

**A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

தச்சன் ஒருவன் ஒரு மரத்தை வெட்டி அதனைத் தேவதைச் சிலையாகச் செதுக்கினான். தச்சன் சிலையை எடுத்துக் கொண்டு வீதி வழியாகச் சென்றான். "இச்சிலையை ___(Q16)___ வைத்திருந்தால் செல்வம் பெருகும்," என்று அதன் சிறப்பைக் கூவிக்கொண்டே சென்றான். ஆனால் பலர் சிலையை வாங்க ___(Q17)___ காட்டினர். சிலர் அவன் கூறுவது உண்மைதானா என்று ஐயம் கொண்டனர். சிலர் தச்சனின் அருகில் வந்து சிலையின் ___(Q18)___ விசாரித்துச் சென்றனர். பின்னர், இந்தச் சிலைக்கு இவ்வளவு பணம் ___(Q19)___ என்று அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர். அவ்வேளையில் இளைஞன் ஒருவன் அங்கு வந்தான். "நண்பா, செல்வம் கொடுக்கும் சிலை என்கிறாய். இந்தச் சிலையை நீயே வைத்துக் கொண்டு நன்மை அடைந்தால் என்ன?" என்று கேட்டான். அதற்குத் தச்சன், "அன்பனே! எனது அவசரத் தேவைக்கு உடனடியாகப் பணம் தேவைப்படுகிறது. ஆனால் சிலையோ ___(Q20)___ பலன் கொடுக்கும்", என்றான். இளைஞனுக்குத் தச்சனுடைய கஷ்டம் புரிந்தது. அவனும் தச்சனுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் அச்சிலையை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

Q16.
1. கூடத்தில்
2. இல்லத்தில்
3. அலமாரியில்
4. அறையில்

Q17.
1. உற்சாகம்
2. குழப்பம்
3. ஆதரவு
4. தயக்கம்

Q18.
1. விலையை
2. உயர்வை
3. பணத்தை
4. மதிப்பை

Q19.
1. செய்வதா
2. வாங்குவதா
3. கொடுப்பதா
4. சம்பாதிப்பதா

Q20.
1. ஓரளவுதான்
2. மெதுவாகத்தான்
3. அளவாகத்தான்
4. சிறிதளவுதான்



More papers at www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

காசி நகரில் வெகு காலத்துக்கு முன்பு ஒரு விநோத பழக்கம் இருந்தது. காசி நகரை ஆளும் மன்னர்களின் ஆட்சிக் காலம் ஐந்து ஆண்டுகள் மட்டும்தான். பிறகு, அந்த மன்னரின் கை கால்களைக் கட்டி கங்கை நதிக்கு மறுகரையில் உள்ள காட்டிலிருந்த விலங்குகளுக்கு விருந்தாக அனுப்பி விடுவார்கள். ஆகவே, ஒரு சிலரே கொஞ்ச காலத்திற்காவது சுகபோகத்தில் வாழ்ந்துவிட அரச பதவியை ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரு மன்னரின் ஆட்சிக்காலம் முடிந்ததும் ஓர் அலங்காரப் படகைத் தயாரிப்பார்கள். அமைச்சர்கள் புடைசூழ மன்னன் இறுதி யாத்திரைக்கு அப்படகில் ஏற்றி வழி அனுப்பப்படுவான். இதைக் காண மக்கள் வெள்ளமாகக் கூடுவார்கள். இந்த வழக்கப்படி நந்திவர்மன் என்ற மன்னனும் இறுதி யாத்திரைக்குத் தயாரானான்.

இதற்கு முன் இவ்வாறு அனுப்பப்பட்ட மன்னர்கள் மரண பீதியுடன் காணப்படுவார்கள். ஆனால், நந்திவர்மன் எந்தவொரு கவலையுமின்றி மகிழ்ச்சியாகவே காணப்பட்டான். இதைக் கண்டு ஆச்சரியம் கொண்ட படகோட்டி, "மன்னா ! எதிர்கரைக்குப் போனதும் நீங்கள் மிருகங்களுக்கு இரையாகப் போவதை நினைத்து அஞ்சவில்லையா?" என்று கேட்டான்.

அதற்கு மன்னன், "படகோட்டியே! மறுகரையில் காடுதான் இருக்கிறதென்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாயா? நான் ஆட்சிக்கு வந்தவுடன் என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நிறைய யோசித்தேன். நீ நினைப்பது போல் இப்போது அங்குக் காடு கிடையாது. காட்டு மிருகங்களும் இல்லை. நான் மற்ற மன்னர்களைப் போல இல்லாமல் ஆட்சிக்கு வந்தவுடனேயே ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தேன். கங்கைக்கு மறு கரையிலிருந்த காட்டைச் சொர்க்கமாக்க நடவடிக்கை எடுத்தேன்.

என்னுடைய முதலாவது ஆண்டு ஆட்சிக் காலத்தில் வேட்டைக்காரர்களை அனுப்பி அங்குள்ள மிருகங்களை வேட்டையாடச் செய்தேன். இரண்டாவது வருடத்தில் காட்டை அழித்து நிலத்தைச் **சீராக** அமைத்தேன். மூன்றாவது ஆண்டில் பல கட்டடச் சிற்பிகளை அனுப்பி அரண்மனை, மாளிகைகள், அரங்குகள், பூஞ்சோலைகள் ஆகியவற்றை நிர்மாணிக்கச் செய்தேன். சென்ற வருடத்தில் எனக்கு மிகவும் நம்பிக்கையான சிலரைத் தேர்ந்தெடுத்து அமைச்சர்களாக்கி அங்கு அனுப்பி வைத்தேன். மேலும் பல நம்பிக்கைக்குரிய நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து அப்புதிய நகரில் வாழச் செய்துள்ளேன். காசியைக் காட்டிலும் அழகும் வசதியும் நிறைந்த புதிய நகருக்குச் சென்று வாழ்வதில்



More papers at www.testpapersfree.com

எனக்கு என்ன வருத்தம்? அதோ பார்! என்னை வரவேற்க அமைச்சர்களும் மக்களும் தாளவாத்தியத்தோடு தயாராக வந்திருக்கிறார்கள்," என்று நந்திவர்மன் சொன்னதைக் கேட்டுப் படகோட்டி வாயடைத்து நின்றான்.

Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)

Q21. காசி நகரின் வழக்கம் ஏன் விநோதமானது?

(1) அதன் அரசர்கள் ஐந்து வருடக்காலம்தான் அரசாள முடியும் என்பதால்

(2) அவர்கள் அரசர்களை அடிக்கடி மாற்றிக்கொண்டே இருப்பார்கள் என்பதால்

(3) மன்னராக விரும்புபவர்களை மட்டுமே மன்னராக்குவார்கள் என்பதால்

(4) ஆட்சிக்காலம் முடிந்ததும் அரசனின் கைகால்களை வெட்டி விடுவார்கள் என்பதால்

Q22. காசிக்கு மன்னராக வர ஏன் பலர் விரும்புவதில்லை?

(1) ஐந்து ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்ய முடியும் என்பதால்

(2) கையையும் காலையும் கட்டிப்போட்டு விடுவார்கள் என்பதால்

(3) ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு இறக்க நேரிடும் என்பதால்

(4) கிடைத்த வசதிகளை அனுபவிக்கக் காலம் போதாது என்பதால்

Q23. எது படகோட்டியின் வியப்புக்குக் காரணமாய் இருந்தது?

(1) மன்னருக்கு அவருடைய முடிவு தெரியவில்லை என்பது

(2) மன்னர் இறப்பதற்கு அஞ்சாமல் தைரியமாகக் காணப்பட்டது

(3) காட்டு விலங்குகளுக்கு மன்னர் அஞ்சாமல் இருந்தது

(4) மன்னரின் ஆட்சிக்காலம் இவ்வளவு சீக்கிரம் முடிந்துவிட்டது



More papers at www.testpapersfree.com

Q24. மன்னரின் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் என்ன?

(1) தம் எதிர்கால வாழ்க்கையை வளமாக்குவது

(2) நல்லவர்களுக்கு நன்மை செய்வது

(3) காட்டை அழித்துச் சொர்க்கமாக்குவது

(4) நாட்டு மக்களை ஏமாற்றுவது

**<u>சொற்பொருள்</u>**

வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடுக. (2 மதிப்பெண்கள்)

Q25 சீராக

(1) எழிலாக

(2) வனப்பாக

(3) அழகாக

(4) ஒழுங்காக



More papers at www.testpapersfree.com

## "ஆ" பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q26 | என் தங்கை ______________ நிகழ்ச்சியில் நடனம் ஆடினாள். நாங்கள் அனைவரும் அவளின் நடனத்தைக் காணச் சென்றோம். | Q24 ( ) |
| Q27 | மாறனும் அவனுடைய தங்கையும் பூங்காவிற்குச் சென்று பட்டம் விட்டார்கள். அப்போது பலத்த காற்று வீசியதால், மாறனுடைய பட்டத்தின் நூல் ______________. | Q25 ( ) |
| Q28 | கோமதி கட்டடத்தின் கீழ்த்தளத்தில் உலவும் தெருப் பூனைகளுக்கு உணவு கொடுப்பாள். அவள் இரக்க __________ கொண்டவள். | Q26 ( ) |
| Q29 | என் வீட்டுப் பணிப்பெண் நன்றாகச் சமைப்பாள். அவள் சமைக்கும் மீன் ______________ சுவையாக இருக்கும். | Q27 ( ) |

| | |
|---|---|
| (1) மனம் | (2) அறுந்தது |
| (3) களை | (4) மணம் |
| (5) கறி | (6) கலை |
| (7) அருந்தது | (8) கரி |

/ 8



More papers at www.testpapersfree.com

**D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:



# சிங்கப்பூர் நுண்கலைக் கழகத்தின் 10-வது இசை நடன விழா





இன்னிசை அமுதத்தைப் பருகிப் பேரானந்தத்தில் திளைக்க
உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
கவின் கலைப் பள்ளியின் நடனமணிகள்
இந்தியாவின் புகழ்பெற்ற வாத்திய மற்றும் பக்கவாத்தியக் கலைஞர்களுடன் இணைந்து படைக்கிறார்கள். இந்நிகழ்ச்சி உங்கள் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாக அமையும். தென்னிந்தியாவைச் சேர்ந்த தலைசிறந்த கர்நாடகப் பாடகர் நித்யஸ்ரீ மஹாதேவன் அவர்களுடன் கலந்துரையாட ஓர் அரிய வாய்ப்பு.

**இடம் : எஸ்பிளனேட் கலையரங்கம்**

**நாள் : 31 மார்ச், 2017, சனிக்கிழமை**

**நேரம் : மாலை 6.30 – 9.30 மணி**

பரத நாட்டியம், கதக், ஒடிசி போன்ற பாரம்பரிய நடனங்களுடன் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, சித்தார், புல்லாங்குழல் போன்ற பல்லிசை நிகழ்ச்சிகளும் உண்டு.



## இசை அமுதத்தைப் பருக வாரீர்

**நிகழ்ச்சி நிரல்**

மாலை 6.30 - விளக்கு ஏற்றுதல் & தமிழ் வாழ்த்து – உள்ளூர் கலைஞர்கள்
6.45 - வரவேற்புரை மற்றும் கலைஞர்களைக் கௌரவித்தல் – கலைஞர் பாஸ்கர்
இரவு 7.00 - கவின் கலைப் பள்ளியின் நடனப் படைப்பு
7-9 மணி – வெவ்வேறு அறைகளில் வெவ்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்

- வரவேற்பு அறையில் அன்றே பதிவு செய்துகொள்ளலாம்.

(முக்கியக் குறிப்பு - கர்நாடகப் பாடகர் நித்யஸ்ரீ மஹாதேவன் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையம்வழி கட்டாயம் முன்பதிவு செய்திருக்க வேண்டும். )

மேல்விவரங்களுக்குச் சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழக அலுவலகம், 6299 5928 அல்லது சிஸ்டிக் 6348 5555 என்ற எண்களுடன் தொடர்புகொண்டு அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள கருத்து விளக்கப்படத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)

Q30. இசை நடன விழா எங்கு நடைபெறும்? (2 மதிப்பெண்கள்)

(1) சிஸ்டிக் அலுவலகத்தில்
(2) கவின் கலைப் பள்ளியில்
(3) எஸ்பிளனேட் கலையரங்கத்தில்
(4) சிங்கப்பூர் நுண்கலைக் கழகத்தில் ( )

Q31. தலைசிறந்த கர்நாடகப் பாடகர் நித்யஸ்ரீ மஹாதேவனுடன் கலந்துரையாட விரும்புவோர் என்ன செய்ய வேண்டும்? (2 மதிப்பெண்கள்)

(1) இணையம்வழி முன்பதிவு செய்திட வேண்டும்
(2) ஏழு மணிக்குள் அறைக்குச் செல்ல வேண்டும்
(3) வரவேற்பறையில் அன்றே பதிவு செய்ய வேண்டும்
(4) சிங்கப்பூர் இந்திய நுண்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும் ( )

Q32. தமிழ் வாழ்த்து பாடுவது யார்? (2 மதிப்பெண்கள்)

(1) கலைஞர் பாஸ்கர்
(2) உள்ளூர் கலைஞர்கள்
(3) நித்யஸ்ரீ மஹாதேவன்
(4) பக்கவாத்தியக் கலைஞர்கள் ( )

Q33. கவின் கலைப் பள்ளியின் நடனமணிகளின் நடனங்கள் எதனால் சிறப்பாக அமைகின்றன? (4 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

/10



More papers at www.testpapersfree.com

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

குமார் தன் பத்தாவது பிறந்தநாளை நண்பர்களுடன் கொண்டாட ஆசைப்பட்டான். அன்று அவன் அவர்களை இரவு உணவுக்காக வீட்டிற்கு அழைத்திருந்தான். ஒவ்வொரு நண்பராக வீட்டிற்கு வரத் தொடங்கினர். முதலில், கார்த்திக் வந்து புத்தகம் ஒன்றை குமாருக்குப் பரிசளித்தான். தொடர்ந்து, அவனது மற்ற நண்பர்கள் வந்தனர். அவர்கள் சற்று விலையுயர்ந்த பொருள்களைக் குமாருக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்.

குமாருடைய தந்தை ராமன், வீட்டிற்கு வந்திருந்த அனைவரையும் கவனித்தார். குமாரின் நெருங்கிய நண்பன் பாபுவை மட்டும் காணவில்லை என்பதை உணர்ந்தார். உடனே ராமன் தன் மகனை அழைத்து, "பாபுவை இன்னும் காணவில்லையே! அவன் வந்தவுடன் கேக் வெட்டிவிடலாம் அல்லவா?" என்று கேட்டார். "இல்லை அப்பா... நான் அவனை அழைக்கவில்லை. நேற்று என் மிதிவண்டி பழுதாகிவிட்டது. பள்ளி முடிந்து பாபு என்னை மிதிவண்டியில் அழைத்து வருவதாகச் சொன்னான். ஆனால், அவன் என்னை விட்டு விட்டுத் தனியாகக் கிளம்பிவிட்டான். அவன் மீதுள்ள கோபத்தைக் காட்டுவதற்காக நான் அவனைப் பிறந்தநாளுக்கு அழைக்கவில்லை," என்று கூறினான்.

ராமன் உடனே தம் மகனிடம், "பாபு உனக்குச் செய்த நன்மைகளை மறந்து விட்டு ஏதோ அறியாமல் நடந்த தவறுக்காக அவன் மீது பகை கொள்ளக் கூடாது. ஒருவர் நமக்கு ஏதேனும் ஒரு சூழலில் தீமை செய்தாலும்கூட, அவர் செய்த நல்லவற்றை மட்டும் நினைவில் வைத்து நாம் அவருக்கு நன்மையே செய்யவேண்டும். இதுதான் நல்ல மனிதர்களின் பண்பு. நீ உடனே தொலைபேசி வழி தொடர்புகொண்டு பாபுவை வரச் சொல்!" என்றார். தந்தையின் அறிவுரை குமாரின் மனதிலிருந்த கோபத்தை நீக்கியது. அவன் மனம் மாறி உடனே பாபுவைத் தொலைபேசியில் அழைத்தான்.

சற்று நேரத்தில் பாபு வீட்டிற்கு வந்தான். குமாரைக் கண்டவுடன் பாபு, "நேற்று என் மிதிவண்டியில் உன்னை அழைத்து வருவதாகச் சொன்னதை நான் மறந்துவிட்டேன். பாதி வழி சென்ற பிறகுதான் நினைவுக்கு வந்தது. நான் மீண்டும் பள்ளிக்குத் திரும்பி வந்தபோது உன்னைக் காணவில்லை. இப்போது கடைசி நேரத்தில் என்னை அழைத்ததால் உனக்கு எளிய பரிசைத்தான் வாங்கி வர முடிந்தது," என்று கவலையோடு சொல்லி ஒரு பேனாவைப் பரிசாகக் கொடுத்தான். அப்போது குமார், "அன்போடு கொடுக்கும் எந்தப் பரிசும் விலை மதிப்புள்ள பரிசுதான், பாபு!" என்று கூறிப் பேனாவை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டான்.



More papers at www.testpapersfree.com

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34 குமார் ஏன் தன் நண்பர்களை இரவு உணவுக்கு அழைத்திருந்தான்? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

Q35 திரு ராமன் எப்பொழுது கேக்கை வெட்டலாம் என்று நினைத்தார்? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

Q36 குமார் ஏன் பாபுவைத் தன் பிறந்தநாள் விழாவுக்கு அழைக்கவில்லை? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q37 எதனை நல்ல மனிதர்களின் பண்பு என்று தந்தை குமாரிடம் கூறினார்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

/ 11



More papers at www.testpapersfree.com

Q38 தந்தையின் அறிவுரை குமாருடைய மனதை எவ்வாறு மாற்றியது? (3 மதிப்பெண்கள்)

Q39 பாபு பேனாவைக் குமாரிடம் பரிசாகக் கொடுத்தபோது, குமார் என்ன கூறினான்? ஏன்? (4 மதிப்பெண்கள்)

Q40 குமார் எந்த உண்மையை அறியாமல் கோபம் கொண்டான் என்பதைப்பற்றி உன் நண்பனுக்கு நீ குறிப்பொன்றை எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள பாலா,

அன்புடன்,

ரவி

**முற்றும்**

/11

More papers at www.testpapersfree.com

**ANSWER KEY**

| | | |
|---|---|---|
| 1. 2 | 13. 4 | 24. 1 |
| 2. 3 | 14. 2 | 25. 4 |
| 3. 2 | 15. 2 | 26. 6 |
| 4. 4 | 16. 2 | 27. 2 |
| 5. 1 | 17. 4 | 28. 1 |
| 6. 4 | 18. 1 | 29. 5 |
| 7. 2 | 19. 3 | 30. 3 |
| 8. 1 | 20. 2 | 31. 1 |
| 9. 3 | 21. 1 | 32. 2 |
| 10. 2 | 22. 3 | |
| 11. 4 | 23. 2 | |
| 12. 3 | | |

Q33. கவின் கலைப் பள்ளியின் நடனமணிகள் இந்தியாவின் புகழ்பெற்ற வாத்திய மற்றும் பக்கவாத்தியக் கலைஞர்களுடன் இணைந்து நடனங்களை வழங்குவதால் அவை சிறப்பாக அமைகின்றன.

Q34 குமார் தன் பத்தாவது பிறந்தநாளை தன் நண்பர்களுடன் கொண்டாட ஆசைப்பட்டதால் அவன் அவர்களை இரவு உணவுக்காக வீட்டிற்கு அழைத்திருந்தான்.

Q35 திரு ராமன் குமாரின் நெருங்கிய நண்பன் பாபு வந்தவுடன் கேக்கை வெட்டலாம் என்று நினைத்தார்.

Q36 குமாரின் மிதிவண்டி பழுதடைந்து விட்டதால் பாபு பள்ளி முடிந்து குமாரை மிதிவண்டியில் அழைத்து செல்வதாகச் சொல்லிவிட்டு அவனை விட்டுவிட்டுத் தனியாக கிளம்பிவிட்டதால் குமார் பாபுவின் மீதுள்ள கோபத்தைக் காட்டுவதற்காக அவனைப் பிறந்தநாளுக்கு அழைக்கவில்லை.

Q37 ஒருவர் நமக்கு ஏதேனும் ஒரு சூழலில் தீமை செய்தாலும் கூட, அவர் செய்த நல்லவற்றை மட்டும் நினைவில் வைத்து நாம் அவருக்கு நன்மை செய்வதே நல்ல மனிதர்களின் பண்பு என்று தந்தை குமாரிடம் கூறினார்.



More papers at www.testpapersfree.com

Q38 தந்தையின் அறிவுரை பாபுவின்மீது குமார் மனதில் கொண்டிருந்த கோபத்தை நீக்கியதோடு அவன் பாபுவைத் தொடர்புகொண்டு அவனது பிறந்தநாள் விழாவிற்கு அழைக்கவும் வைத்தது.

Q39 பாபு பேனாவைக் குமாரிடம் பரிசாகக் கொடுத்தபோது, அன்போடு கொடுக்கும் எந்த பரிசும் விலை மதிப்புள்ள பரிசு என்று குமார் கூறினான். குமார், பாபு அன்போடு தனக்குத் தந்த பரிசு எளிய பரிசல்ல அது மிகவும் விலை மதிப்புள்ள பரிசாகத் தான் கருதுவதை அவனுக்கு உணர்த்துவதற்காக அவ்வாறு சொன்னான்.

Q40 பாபு முந்தைய தினத்தன்று தன் மிதிவண்டியில் குமாரை அழைத்து வருவதாகச் சொன்னதை மறந்துவிட்டான். பாதி வழி சென்ற பிறகுதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. அவன் தன்னைத் தேடி மீண்டும் பள்ளிக்குத் திரும்பி வந்த உண்மையைக் குமார் அறியாமல் பாபுமீது கோபப்பட்டான். இதுவே குமார் செய்த தவறாகும்.



More papers at www.testpapersfree.com